இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

# பரிந்துரைகளைக் கோருதல்

## மாதுரு ஒய வலக் கரை சீனி அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கான சர்வதேச போட்டித் தன்மையுள்ள விலை மனுக்களைக் கோருதல்

1. மாதுரு ஒய வலக் கரை அபிவிருத்திக் கருத்திட்டமானது "இரஜரட்டை நவோதய" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான "பொலொன்னருவையை விழிப்புணர்வூட்டல்" ("பிபிதெமு பொலொன்னருவ") மாவட்ட அபிவிருத்திக் கருத்திட்டம் 2016 - 2020 இன் கீழான ஒருங்கிணைந்த பிரதான கருத்திட்டமொன்றாகக் காணப்படுகின்றது. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும், மக்கள் சீனக் குடியரசுக்குமிடையிலான உடன் படிக்கையொன்றுக்கு அமைய மாவட்டத்துக்குறிய குடிகளின் வாழ்க்கைத் தரத்தை மேலுயர்த்து நோக்கிலும், குடி மக்களுக்கான குடி நீர் மற்றும் நீர்ப்பாசனத்துக்கான நீர் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கும், குடி மக்களது உட் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்குமென இக் கருத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

2. இப் பிரதேசத்துக்குறிய நிலையான அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் கிட்டத்தட்ட 10,000 ஹெக்டயார் காணிகள் வர்த்தகப் பெறுமதியுள்ள கரும்புப் பயிர்ச் செய்கைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. சீனித் தொழிற்சாலைக்கும், நாற்றங்கால்களுக்குமென 250 ஹெக்டயார் காணிகள் ஒதுக்கீடு செய்யப்படுவதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயக் குழுக்களுக்குக் குறைந்தளவு 1 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள காணிகள் கரும்புப் பயிர்ச் செய்கைக்கெனப் பகிர்ந்தளிக்கப்படும். இதற்கெனக் குறிப்பாக பொலொன்னருவை, மட்டக்களப்பு மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. நிலையான விருத்தி அடைவதைத் தவிர இதன் வாயிலாக சீனியில் தன்னிறைவு எனும் நோக்கை அடையக் கூடிய வழி வகைகளும் மேற்கோள்ளப்படும்.

3. இதற்கமைய, அண்ணலவாக 10,000 ஹெக்டயார் காணிகளில் கரும்புப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கும், நாற்றங்காலை நிலை நாட்டுவதற்கும், 250 ஹெக்டயாரில் 4000 ரீசீடீ செயன் முறைகளை 6000 ரீசீடீ களாக விருத்தி செய்யக் கூடிய திறன் கொண்டதும், பரிந்துரைகளைக் கோரும் ஆவணத்திலுள்ள நிபந்தனைகளுக்கு அமைய மாதுரு ஒய வலக் கரை சீனி அபிவிருத்திக் கருத்திட்டத்தைச் செயற்படுத்தக் கூடிய முதலீட்டாளர்களிடமிருந்து சர்வதேச போட்டித் தன்மையுள்ள பரிந்துறைகளை முத்திரையிடப்பட்ட பரிந்துரைகளாக முன் வைக்குமாறு நிலையான அமைச்சரவை நியமித்த கொள் முதல் குழுத் (SCAPC) தலைவரினால் அறிவிக்கப்படுகின்றது.

4. பின்வரும் முதல் நிலைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் முதலீட்டாளர்களுக்கு மாத்திரம் இப் பரிந்துரைக் கோருதலுக்கு பதிலளிக்குமாறு அழைக்கப்படுகின்றது.

    - ஒரே மாதிரியான அல்லது தொடர்புடைய கருத்திட்டங்களில் மேற்கொண்ட பணிகள் தொடர்பான அனுபவம் (விவசாயம் மற்றும் சீனி உற்பத்திச் செயன் முறை ஆகிய இரண்டு துறைகளும்) அல்லது இன்றைய ஈடுபாடு.

    - தேவையான வசதிகளையும், நிறுவனங்களையும், பொது ஏற்புடைமை மற்றும் கருத்திட்டத்தைத் திருப்திகரமாகக் குறித்த கால வரையறையினுள் முன்னெடுக்கக் கூடிய தர உத்தரவாதத் திட்டத்தையும் தன்னகத்தே கொண்டிருத்தல்.

- நிதி மூலங்களை விளக்கப்படுத்தக் கூடிய திறன், அஃதாவது பயன்படுத்தக் கூடிய அல்லது எளிதில் பணமாக்கக் கூடிய சொத்துக்கள் காணப்படுதல், கடன் பெறக் கூடிய திறன் அல்லது கருத்திட்டத்துக்கான நிதித் தேவைகளை நிவர்த்தி செய்யக் கூடிய நிதியியல் வளங்களைத் தன்னகத்தே கொண்டிருத்தல்.

- குறைந்தது சமாந்தர நிலைக்குறிய 01 கருத்திட்டத்தையாவது நிலை நாட்டியிருத்தல் மற்றும் கடந்த 05 வருட காலப் பகுதியின் கொள் திறன்.

5. முதலீட்டாளர்கள், கருத்திட்டத்துக்கான பொருத்தப்பாடு மற்றும் தகைமைகளை நிறைவாக அறிந்து கொள்வதற்கு www.environmentmin.gov.lk மற்றும் www.mahaweli.gov.lk இணைய தளங்களில் பிரசுரிக்கப்படும் பரிந்துரைகளைக் கோரும் ஆவணத்தைப் பரிசீலனை செய்யவும். ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் பரிந்துரைகளைக் கோரும் அச்சு நகலை அல்லது மேலதிக விபரங்களை இலக்கம் 500, ரீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10, இலங்கை எனும் முகவரியிலுள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தில் அலுவலகத்திலிருந்து (தொலை பேசி இலக்கம் 009411- 2689653 /009411- 2687238) அலுவலகப் பணி நாட்களில் மு.ப 0900 மணியிலிருந்து பி.ப 1600 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

6. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் உத்தியோகபூர்வ இணைய தளம் www.environmentmin.gov.lk அல்லது இலங்கை மகாவலி அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணைய தளம் www.mahaweli.gov.lk இல் காணப்படுகின்ற பரிந்துரைகளைக் கோரும் வழிகாட்டுதலுக்கு அமைய பரிந்துரைகளை முன் வைத்தல் முதலீட்டாளர்களின் பொறுப்பாகும்.

7. பரிந்துரையை ஐக்கிய அமெரிக்க டொலர் 1000.00 (ஆயிரம் மாத்திரம்) பெறுமதியுள்ள அல்லது இலங்கை ரூபா 150,000.00 பெறுமதியுடையதாக பணிப்பாளர் நாயகம், இலங்கை மகாவலி அதிகார சபை எனும் பெயருக்கு எழுதப்பட்ட வங்கி வரைவுடன் இணைத்துச் சமர்ப்பிக்க வேண்டும். நிபந்தனையிடப்படாத வங்கி உத்தரவை ஐக்கிய அமெரிக்க டொலர் 100,000 (நூறு ஆயிரம் மாத்திரம்) வங்கி பிணையுடன் அல்லது இலங்கை ரூபா 15 மில்லியன் பிணையுடன் பரிந்துரையிலுள்ள இணைப்பு 4 உருமாதிரிக்கு அமைய முன் வைக்க வேண்டும். வங்கிப் பிணையானது வெளி நாட்டு வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருப்பின், அது இலங்கையிலுள்ள வர்த்தக வங்கியொன்றினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். **இக் கொடுப்பனவுகளற்ற எவ்விதப் பரிந்துரைகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது**

8. முதலீட்டளர்களுடனான முன் பரிந்துரைக் கூட்டமானது கீழே குறிக்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி மு.ப 1030 மணிக்கு நடைபெறும். முதலீட்டாளர்கள் அல்லது அவர்களது பிரதி நிதிகள் இக் கூட்டத்தில் பங்கு பற்றுமாறு அழைக்கப்படுவதுடன், இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்துக்கு முன்னறிவித்துக் குறித்த திடலை 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி மு.ப 1000 மணிக்கு பார்வையிடலாம்.

9. பரிந்துரையானது கீழே குறிக்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள தலைவர், நிலையான அமைச்சரவை நியமித்த கொள் முதல் குழுவுக்கு (SCAPC) 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் திகதி பி.ப 1500 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புமாறு அறிவிப்பதுடன், அப் பரிந்துரைகள் முதலீட்டாளர்களின் பிரதி நிதிகளின் முன்னிலையில் அச் சந்தர்ப்பத்திலேயே திறக்கப்படும். பரிந்துரைகளைக் கோரும் நிபந்தனையுடன் பொறுந்தாத பரிந்துரைகள் நிராகரிக்கப்படும்.

தலைவர்,
நிலையான அமைச்சரவை நியமித்த கொள் முதல் குழு,
இலக்கம் 500, ரீ. பீ. ஜாயா மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை